1878/அ2/23

**பதிவஞ்சல் மூலமாக**

ந.க.எண்.11835/பதொ.4/இரு.3/2019

பொதுசுகாதாரம்மற்றும்நோய்தடுப்பு
மருந்துத்துறைஇயக்குநரகம்,
சென்னை–6
நாள்: 07 .11.2023.

22 DEC 2023

பொருள்: பணியாளர் தொகுதி – பொது சுகாதாரம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – திருமதி.சா.நிரோஷா, தா/பெ. (அமரர்) திருமதி.அ.சலீமாபேகம், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஜேடர்பாளையம், நாமக்கல் சுகாதாரப்பகுதி மாவட்டம்– கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன் முறைப்படுத்தப்பட்டது – ஆணை வரப்பெற்றது– அனுப்புதல் –தொடர்பாக.

பார்வை:

1. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண். 11835/பதொ.4/ இரு.3/2019 நாள்: 19.07.2019
2. இவ்வலுவலக கடித ந.க.எண். 11835/பதொ.4/இரு.3/ 2019 நாள்: 07.02.2022
3. அரசு கடித எண்.5780/ஏபி1/2021–1, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள் 17.05.2022.
4. இவ்வலுவலக கடித ந.க.எண். 11835/பதொ.4/இரு.3/ 2019 நாள்: 27.08.2022
5. அரசு கடித எண்.5780/ஏபி1/2021–1, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்துறை, நாள் 02.05.2023.
6. இவ்வலுவலக கடித ந.க.எண். 11835/பதொ.4/இரு.3/ 2019 நாள்: 21.06.2023
7. அரசாணை. (2ப)எண்.108, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத்(ஏபி1) துறை, நாள்:12.10.2023
8. அரசு கடித எண்.5780/ஏபி1/2021–1, மருத்துவம்– மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 18.10.2023.

******

பார்வை1–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, திருமதி.சா.நிரோஷா, தா/பெ. (அமரர்) திருமதி.அ.சலீமாபேகம் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஜேடர்பாளையம், நாமக்கல் சுகாதாரப்பகுதி மாவட்டத்தில் 23.07.2019 முற்பகல் பணியில் இணைந்துள்ளார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை 23.07.2019 முதல் வரன்முறை செய்ய கோரி பார்வை இரண்டில் காணும் இவ்வலுவலக கடித வாயிலாக கருத்துரு அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2) அதன் அடிப்படையில் பார்வை 7–ல் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 23.07.2019 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தப்பட்டு அரசின் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து தனியரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் பார்வை 8–ல் காணும் அரசு கடிதத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

..2

3) எனவே பார்வை8-ல் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற தனியரின் கீழ்க்கண்ட அசல் சான்றிதழ், பார்வை7-ல் வரப்பெற்ற பணிவரன்முறை அரசாணை ஆகியவை துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், நாமக்கல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், நாமக்கல் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

1. திருமதி.சா.நிரோஷா என்பவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று(அசல்)எண்.2153126, 0459765 (2)
2. திருமதி.சா.நிரோஷா என்பவரின் மாற்றுச்சான்று (TC)(அசல்) எண்.43/2004-05

4) மேலும் மறைந்த அரசு ஊழியர் (அமரர்) திருமதி.அ.சலீமாபேகம், (துணை செவிலியர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கொக்கராயன்பேட்டை, நாமக்கல் சுகாதாரப் பகுதி மாவட்டம்12.09.2006-ல்இறப்பு) என்பவரின் பணிப்பதிவேடு (தொகுதி-I, II, III) இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட அசல் சான்றிதழ்கள் மற்றும் மறைந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், நாமக்கல் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு: பணிப்பதிவேடு(தொகுதி-I, II, III)

தா.முருகதாஸ்
இணை இயக்குநர் (நிர்வாகம்)

**பெறுநர்**

துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், நாமக்கல் (அரசாணை. (2ப) எண்.108, மருத்துவம்- மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை, நாள்:12.10.2023) இணைக்கப்படுகிறது. அசல் அரசாணையினை தனியருக்கு சார்பு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**நகல்**

திருமதி.சா.நிரோஷா,
தா/பெ. (அமரர்)திருமதி.அ.சலீமாபேகம்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஜேடர்பாளையம்,
நாமக்கல் சுகாதாரப்பகுதி மாவட்டம்
துணைஇயக்குநர்சுகாதாரப்பணிகள், நாமக்கல் மூலமாக
இருப்புகோப்பு-1/உபரி -1.

//உண்மைநகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

ந.க.எண். 7030/அ2/2019

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
அலுவலகம். நாமக்கல்

அனுப்பப்படுகிறது.

பா த 14.11.23

தே.நி.கண்காணிப்பாளர்
20/11/2023 20.11.23

21/12

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
நாமக்கல்

2/11/23

## சுருக்கம்

பணியமைப்பு – பொது சுகாதாரம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை – திருமதி.சா.நிரோஷா, தா/பெ. (அமரர்) திருமதி.அ.சலிமாபேகம், இளநிலை உதவியாளர் – பணி வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண். 108

நாள். 12.10.2023
சோபகிருது, புரட்டாசி–25
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.11835/ப.தொ.4/இரு.3/2019 நாள் 07.02.2022 மற்றும் 21.06.2023,

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் நாமக்கல் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில், கொக்கராயன்பேட்டை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை செவிலியராக பணியாற்றி 12.09.2006 அன்று பணியிடை மரணமடைந்த திருமதி.சலிமாபேகம் என்பவரின் மகள், திருமதி.சா.நிரோஷா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு 23.07.2019 அன்று பணியில் இணைந்தார் என்றும் தனியரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராகப் பணியில் இனணந்த நாளான 23.07.2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துரு, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியரது சான்றிதழ்கள்/ ஆவணங்கள், அரசு ஆணைகளின் அடிப்படையில் உரிய ஆய்வு செய்ததில், திருமதி.சா.நிரோஷா என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார்.

3. இந்நிலையில், மேலே பத்தி ஒன்றில் கண்டுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.நிரோஷா என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை

உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 23.07.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன் தேதியிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, மனிதவள மேலாண்மைத் துறையின் அசாகு.எண்.5248842/ஜி2/.2023 நாள் 21.09.2023-ன் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை – 600 006.
தனியர், (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர்,
சென்னை – 600 006 வழியாக.)
மாநில தலைமை கணக்காயர், சென்னை – 600 018.
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்.

**நகல்**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
மனித வள மேலாண்மை (ஜி) துறை, சென்னை-600 009.
மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத் (தகவு பிரிவு) துறை, சென்னை – 600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/10/2023

பிரிவு அலுவலர்.

ந.க.எண். 7030/அ2/2019

துணை இயக்குநர் சுகாதாரப பணிகள
அலுவலகம் நாமக்கல்.
நாள்: .12.2023

16/10/23

அனுப்பப்படுகிறது

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள்
நாமக்கல்.

பெறுநர்:
திருமதி.பா. பிரேமா,
இளநிலை உதவியாளர்,
ஆரம்ப சுகாதார நிலையம், நாமகிரிப்பேட்டை
[வட்டார மருத்துவ அலுவலர் மூலம்]